# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# நதியிலிருந்து வந்த இளவரசன்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: M. Maillot; Lazarus

தழுவியவர்: M. Maillot; Sarah S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

பிரதம மந்திரியாக இருந்த யோசேப்பு இறந்து போனான். எகிப்தியர் அனைவரும் அவர்களுடைய குடும்ப துக்கத்திலே கலந்து கொண்டார்கள்.



தேசத்தை பஞ்சத்திலிருந்து
காப்பாற்ற தேவன்
எபிரேயனாகிய யோசேப்பை
உபயோகப்படுத்தினார்.
அவன் ஞானமுள்ளவன்,

எல்லோராலும்
விரும்பப்பட்டவன்.
ஆனால்
இப்போது
அவன்
இல்லை.



ஏறக்குறைய முன்னூறு வருடங்கள் கடந்து விட்டன. யோசேப்பின் சந்ததியாகிய எபிரேயர்கள், எகிப்திலே ஒரு பெரிய ஜனக்கூட்டமாய் மாறினார்கள்.



புதிய பார்வோன், எங்கே எபிரேயர் தனக்கு எதிராக மாறிவிடுவார்களோ என்று பயந்து, அவர்களை அடிமைகளாக்கினான்.



பார்வோன் எபிரேயரை மிகவும் கொடூரமாக நடத்தினான். அவர்களை கட்டாயப் படுத்தி பெரிய பட்டணங்களை கட்டினான். ஆனால் அவன் எவ்வளவுக்கதிகமாக கஷ்டப்படுத்தி வேலை வாங்கினானோ அவ்வளவுக்கதிகமாய் அவர்கள் எண்ணிக்கையிலே பெருகினார்கள்.



ஒரு நாள், பார்வோனிடமிருந்து ஒரு பயங்கரமான கட்டளை பிறந்தது. "புதிதாக பிறக்கிற ஒவ்வொரு ஆண் பிள்ளைகளையும் நைல் நதியிலே போடச்சொன்னான்." துஷ்டனான பார்வோன் எப்படியாவது எபிரேயர்களை கட்டுப்படுத்த வேண்டுமென கங்கனம் கட்டினான்.

குழந்தைகளைக்கூட
அவன் கொலை
செய்வான்!



"நான் என்ன செய்வது?"  என்று ஒரு குடும்பம் திகைத்திருக்கலாம்.  அவர்கள் தங்களுடைய குழந்தையை நைல் நதியிலே போட நினைத்தார்கள்.  ஆனால் அந்த குழந்தையை தண்ணீர் புக முடியாத ஒரு கூடையை செய்து நன்றாக கீல் பூசி அதிலே வைத்தார்கள்.



இந்த அருமையான சுமையைச் சுமந்து கொண்டு,
அந்தக் கூடையானது நாணற்செடியின் மத்தியில் படகு போல்
மிதந்தது. அந்த குழந்தைக்கு என்ன
வேனுமானாலும் நடக்கலாம்.



அழகான அந்த கூடையானது நாணற்செடிகளின் மத்தியில் மிதந்துக்கொண்டிருந்ததை, அந்தக் குழந்தையின் சகோதரி தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தாள்.



திடீரென பார்வோனின்
குமாரத்தியும், அவளுடைய
வேலைக்காரிகளும், குளிப்பதற்காக
நதியோரம் வந்தார்கள்.





அந்தக் கூடையானது மறைவாக இருப்பதற்கு சாத்தியமில்லை. ஒரு வேளை அதை காணாமல் கூட நடந்து போய்விடலாம்.

"ஓ!  ஒரு கூடை: அந்த நாணல்களுக்கு மத்தியிலே. அதற்குள்ளாக என்ன இருக்க வேண்டும் என்று ஆச்சரியப்பட்டாள்."  வேலைக்காரிகளை அந்த கூடையை எடுத்துக் கொண்டு வரும்படி பார்வோன் குமாரத்தி சொன்னாள். அவள் திறந்து பார்த்த போது அந்தக் குழந்தை அழத்தொடங்கியது. "இது ஒரு எபிரேயக் குழந்தை," என்று இளவரசி உரக்கக் கூறினாள்.



"சின்ன ஏழைப் பிள்ளை. நீ மிகவும் அழகாயிருக்கிறாய்." பெரியவர்கள் இப்படி பேசுவது போல பார்வோனின் குமாரத்தியும் பேசியிருக்கலாம். "சின்னஞ்சிறு அழகுச் செல்லமே" என்று எகிப்திய பாஷையிலே சொல்லியிருக்கக்கூடும்.



தேவன் விசேஷித்த ஞானத்தை அந்தக் குழந்தையின் சகோதரிக்கு கொடுத்திருக்க வேண்டும். பார்வோனின் குமாரத்தியினிடத்தில் அவள் ஓடினாள். "இந்தக் குழந்தையை வளர்த்திட நான் ஒரு எபிரேய ஸ்திரீயை அழைத்துக்கொண்டு வரட்டுமா?" "நீ செய்யலாம்" என்று பதில் வந்தது. அவள் ஓடிப் போய் யாரை அழைத்துக் கொண்டு வருவாள் என்று நினைக்கிறீர்கள்?



"அம்மா!  சீக்கிரமாக வாருங்கள்!  ஓ சீக்கிரம்!"
ஒருவேளை எல்லாவற்றையும் விளக்கிச் சொல்ல
நேரமில்லாதிருந்திருக்கலாம்.
அவர்கள் இரண்டு
பேரும் சேர்ந்து
நடை பாதையிலே
வேகமாய்
சென்றார்கள்.



நதியண்டையிலே, "இந்தக் குழந்தையை எனக்காக வளர்த்து விடு. நான் உனக்கு சம்பளம் கொடுக்கிறேன். அவனை மோசே என்று கூப்பிடு," என்று குழந்தையை கரம் நீட்டி கொடுத்தாள்.

எகிப்திய பாஷையிலே மோசே என்றால் தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்டவன் என்றிருக்கலாம்.



ஆகையால் மோசே திரும்பவும்
தன்னுடைய பெற்றோரிடமும், வீட்டிற்கும்
வந்துவிட்டான். தேவனையும், எபிரேய
ஜனங்களையும் நேசிக்க அவனுக்கு
கற்றுக்கொடுத்தார்கள்.
இன்னும் கொஞ்ச
காலத்தில் அவன்
அரண்மனையில்
பார்வோனின்
மகளுடன் வாழப்
போய் விடுவான்.



குழந்தை மோசேயை தேவன் காப்பாற்றி, அவனுக்கு ஒரு பெரிய எதிர்கால திட்டத்தை வைத்திருந்தார்.



நதியிலிருந்து வந்த இளவரசன்

தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

யாத்திராகமம் 2

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16